රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/பொது
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.05.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்களை சமர்ப்பித்தல்**

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கடிதங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசிகள் மற்றும் லீவு அறிக்கைகளைப் பரிசீலனை செய்யும் போது அவ்வாவணங்களில் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனபடியால் எதிர்வரும் காலங்களில் சத்தியக் கடதாசிகள் மற்றும் லீவு அறிக்கைகளை அனுப்பும் போது இணைப்பு 01 மற்றும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களின் படி அனுப்பி வைக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

- இணைப்பு 01 - உத்தியோகத்தரின் பெயரில் மாற்றங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் சத்தியக் கடதாசி
- இணைப்பு 02 - லீவு அறிக்கை

02. மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்திற்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படுவது பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி நிலை என்பது பற்றி துல்லியமாக உறுதிப்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பட்டதாரி பெறுபேற்றை உறுதிப்படுத்தும் கடிதத்தில் உள்ளடங்கப்பட வேண்டிய சகல தகவல்களும் குறிப்பிடப்பட்டிருக்காமையினால், குறித்த பல்கலைக்கழகத்திலிருந்து அப்பட்டப் பெறுபேற்றினை சான்றுப்படுத்தும் கடிதம், இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

## <u>சத்தியக் கடதாசி</u>

(....பெயர்......) செல்வி/திரு/திருமதி ஆகிய எனது வயது (........) மற்றும் பிறந்த திகதி (திகதி.மாதம்.வருடம்) ஆகும். நான் (விவாகமான/விவாகமாகாத), (இலங்கை/வேறு) பிரஜையாவேன் எனவும் (பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் பேர்கர்) ஆகிய மதத்தைப் பின்பற்றுகின்றவராகவும் எனது தேசிய அடையாள அட்டை இலக்கம் (..........................) மற்றும் முகவரி (………..) ஆகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் கௌரவ கம்பீரமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதிமொழியளிக்கின்றேன்.

01. மேற்படித் தகவல்களைக் குறிப்பிடுகின்ற மற்றும் கையொப்பமிட்டு உறுதிமொழியை அளிப்பவர் நானாவேன்.

02. இலக்கம் (............) உடைய (.......... பதிவு இலக்கம்.........) ஆந் திகதிய பிறப்புச் சான்றிதழில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் (முழுப் பெயர் - பிறப்புச் சான்றிதழில் குறிப்படப்பட்டுள்ளவாறு) என்றவாறாகும்.

03. (வெளியிடப்பட்ட திகதி) ஆந் திகதிய இலக்கம் (தே.அ.அ. இலக்கம்) உடைய தேசிய அடையாள அட்டையில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் ( முழுப் பெயர்- தே.அ.அ. இன் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) என்பதாகும்.

04. இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் (CS/DOS/XXXXX) உடைய (நியமனத்தில் ஒப்பமிட்ட திகதி ) ஆந் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - 111 ஆந் தரத்துடைய நியமனக் கடிதத்தில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் ( நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுப் பெயர்) எனவாகும்.

05. (பல்கலைக்கழகம்) மூலம் வழங்கப்பட்டுள்ள (இலக்கம்) இலக்கம் கொண்ட (திகதி ) ஆந் திகதிய பட்டத்தை சான்றுப்படுத்தும் கடிதத்தின் மூலம் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் ( சான்றுப்படுத்தும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எனது முழுப் பெயர்) என்பதாகும்.

06. (பல்கலைக்கழகம்) மூலம் வழங்கப்பட்ட பட்ட விவர பெறுபேற்று ஆவணத்தில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் (முழுப் பெயர்- விவரமான பெறுபேற்று ஆவணத்தின் படி ) என்றவாறாகும்.

07. (ஏனைய ஆவணங்கள்) இல் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதம் ( முழுப் பெயர்) என்றவாறாகும்.

08. மேற்குறிப்பிட்டவாறு (1 ஆம் பெயர் ), (2 ஆம் பெயர் ), (3ஆம் பெயர்), (4 ஆம் பெயர் ),……………. என குறிப்பிடப்பட்டுள்ளதானது பல பேர் அன்று ஒருவரான ( சரியாக பிரயோகிக்கும் முழுப் பெயர்) ஆகிய நான் மட்டும் என்பதோடு மற்றும் அடுத்துவரும் சகல கடமை நடவடிக்கைகளிலும் ( எதிர்காலங்களில் கடமை நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் பெயர்) என்றவாறு பிரயோகிக்கபடும் என இத்தால் உறுதிமொழி அளிக்கின்றேன்.

| |
|---|
| மேற்குறிப்பிட்ட கூற்று உறுதிமொழி அளிப்பவருக்கு விளங்கும் வகையில் ( சிங்களம்/தமிழ்/ஆங்கில ) மொழிகளில் வாசித்துக் காட்டியதன் பின்னர் சரியென ஏற்றுக்கொண்டு வருடம் (XXXX) மாதம் (XX) (XX) ஆந் திகதி (மாவட்டம்) இல் என் முன்னிலையில் அவர் உறுதிமொழியளித்து கையொப்பமிட்டார். |

முத்திரை

உறுதிமொழிய அளித்தவரின் ஒப்பம்

.............................................

சமாதான நீதவானின் இடம்

உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை

**இணைப்பு 02**

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
இணைந்த சேவைகள் பிரிவு,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

**<u>லீவு விபரங்களை வழங்குதல்</u>**

**<u>.......................................(CS/DOS/................) – அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆந் தரம்</u>**

இந்த ...................................................... சேவையாற்றும் .......................................................... செல்வி/திருமதி/திரு ......................................... ஆந் திகதி முதல் ......................... வரை பெற்றுக்கொண்ட லீவுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருடம் | லீவுகள் | | | |
|---|---|---|---|---|
| | அமைய லீவுகள் | ஓய்வு லீவுகள் | அரைச் சம்பளம் ( பிரசவ லீவு தவிர்ந்த) | சம்பளமற்ற (பிரசவ லீவு தவிரந்த) |
| 2013 | | | | |
| 2014 | | | | |
| 2015 | | | | |
| 2016 | | | | |
| 2017 | | | | |
| 2018 | | | | |
| 2019 | | | | |
| 2020 | | | | |
| 2021 | | | | |

உத்தியோகத்தரின் கடந்த லீவுகளாக முன்னைய வருடங்களில் சேமித்து வைத்துள்ள ஓய்வு லீவுகள் பெற்றிருப்பின் அது பற்றிய விபரங்கள் ..........................................................................................................................................
..........................................................................................................................................

………………… ...............................................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

மற்றும் பதவி முத்திரை

**குறிப்பு : -** லீவு அறிக்கையை அனுப்பும் போது நாற்காட்டி வருடத்தின் அடிப்படையில் அனுப்பவும்.

**இணைப்பு 03**

**அபிவிருத்தி உத்தியோகத்தரின் பட்டச் சான்றிதழை உறுதிப்படுத்தும் போது நிறுவனத் தலைவர்கள் குறித்த பல்கலைக்கழகத்தில் விசாரிக்க வேண்டிய விடங்கள்**

- பெயர் :
- பதிவிலக்கம் :
- பரீட்சை சுட்டிலக்கம் :
- இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்ட வருடம் மற்றும் மாதம்:
- மாணவர் நிலை:
- சித்தியெய்தல்:
- பெற்றுக்கொண்ட பட்டம்:
- பட்டம் செயல்வலுப்பெறும் திகதி :